புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
Peer-Reviewed
ISSN : 2456-821X
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/02 - March 2023

# கலிங்கத்துப்பரணியில் போர்க்களத்தில் பெண்களின் நிலை

**ஆய்வாளர்**

**மோகனப்பிரியா.ச**
*முனைவர் பட்ட ஆய்வாளர்*
*தமிழ்த்துறை,*
*அவினாசிலிங்கம்மனையியல் மற்றும் மகளிர்*
*உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர்-43.*

*நெறியாளர்*
*முனைவர்.ச.குருஞானாம்பிகா*
*உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,*
*அவினாசிலிங்கம்மனையியல் மற்றும் மகளிர்*
*உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர்-43.*

## முன்னுரை

*தமிழ் இலக்கியத்தில் பெண்களின் பங்கு மகத்தானது. பழங்காலத்தில் பெண்கள் போர்க்களத்தில் போர் புரியா விடினும் ஆளுமையுடனும் ஆற்றலுடனும் விளங்கினர். இருப்பினும் அவர்களது திறமைகள் மதிக்கப்படவில்லை. பெண்கள் ஆளுமை பெற்றிருப்பினும் எங்கும் அவர்களுக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை. நவீன காலத்தில் பெண்கள் பல்வேறு சாதனைகளைப் புரிகின்றனர். பரணி இலக்கியமான கலிங்கத்துப் பரணியில் போர்க்களத்தில் பெண்களின் நிலையைக் குறித்து எடுத்துரைக்கப்பட்டுள்ளன. பெண்கள் கணவனை இழந்த பின் உடன்கட்டை ஏறுதல், பெண்களை திரைப் பொருளாக செலுத்துதல் உள்ளிட்ட பல காரணங்களுக்காகவே பெண்கள் பற்றி செய்திகள் இலக்கியத்தில் காணப்படுகின்றன. பெண்களின் மன ஆளுமை குறித்து ஆய்வது இவ்வாய்வின் நோக்கமாக அமைகிறது.*

## ஆய்வுச் சுருக்கம்

*பழங்காலத்தில் பெண்களைவிட ஆண்களே மேலோங்கி மதிக்கப்பட்டனர். பெண்களுக்கு ஆளுமை நிறைந்து காணப்பட்டதை இலக்கியங்கள் வழி இறிய முடிகிறது. சங்க இலக்கியத்தில் பெண்கள் போர்க்களத்திற்கு அனுமதிக்கப்படும் வழக்கம் இல்லை. பிற்காலத்தில் எழுந்த சிற்றிலக்கியங்களிலும் அதே வழக்கம் நிலவுகிறது. கலிங்கத்துப்பரணி குறிப்பிடும் போர்க்களத்தில் பெண்களின் நிலை குறித்தும் நவீன கால பெண்களுடன் ஒப்பிட்டு ஆய்வதும் இவ்வாய்வின் சாராம்சம் ஆகும். போர் முடிந்த பின் களத்தில் மகளிரின்*

*செயல்களையும், பெண்களின் நிலையையும் எடுத்துரைப்பது ஆய்வின் சுருக்கமாக அமைகிறது.*

***பெண்கள்***

*பெண்கள் என்றும் மதிக்கப்பட வேண்டியவர்கள். பழங்காலந்தொட்டே பெண்கள் மகத்துவம் வாய்ந்தவர்கள். பெண்களே நம் நாட்டின் கண்களைப் போல போற்றப்படுகிறார்கள். சங்க இலக்கியத்தில் மங்களமாகக் கருதப்பட்ட பெண்கள் இன்று வீரத்தின் வளர்ச்சியாக மதிக்கப்படுகிறார்கள். சங்க காலத்தில் தொல்காப்பியர்,*

*''அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல்*

*நிச்சமும் பெண்பாற்குரிய'' (தொல்-களவு-8)*

*அச்சம், மடம், நாணம் எல்லாம் பெண்ணுக்குரிய குணங்களாக தொல்காப்பியர் கூறுகிறார். சங்க காலத்தில் பெண் கல்வி தடை செய்யப்படவில்லை. பெண்கள் கல்வி கற்று புலமை வாய்ந்தவர்களாகத் திகழ்ந்தனர். ஔவையார், காக்கைப் பாடினியார் போன்றோர் பெண் கல்வி புலமைக்குச் சான்றாவர்.சமயங்கள் எழுந்த காலத்தில் பெண்கள் கோவில் வழிபாடு செய்தல் விருந்தோம்பல், சமூகப் பணிகளில் கலந்து கொள்ளுதல் சிற்றிலக்கிய காலத்தில் 'பதிவிரதை' என்ற கொள்கை வரையறுக்கப்பட்டது. போர்க்களத்தில் போரிட மட்டும் பெண்களுக்கு எந்த காலத்திலும் அனுமதிக்கப்படவில்லை. பதிவிரதை என்பவள் மனைவி, கற்புக்கரசி என்று கொள்ளப்படுகிறாள். பதிவிரதை வீட்டை மட்டும் அலங்கரிப்பவளாகக் கருதப்பட்டாள். விருந்தோம்பலுக்கு ஏற்றவர்களாகவும் விளங்கினர். இல்லத்தில் சிறந்து விளங்கியவர்கள் மன தைரியத்திலும், வீரத்திலும் ஆண்களுக்கு நிகரானவர்களாகத் திகழ்ந்தனர்.*

*''முந்நீர் வழக்கம் மகடூஉ வோடில்லை*

*கொண்டுதலைக் கழிப்பினும் பிரிந்தவ ரிணங்கினும்*

*உண்டென மொழிப ஓரினத்தான!*

*எண்ணரும் பாசறைப் பெண்ணொடு புணரர்''.*

*என்ற அடிகளின் மூலம் இல்லற மகளிர் வெளியே செல்லாத நிலையும் இருந்துள்ளது. உழைக்கும் மகளிர் தங்கள் கடமைக்காக வெளியே சென்ற நிலையும் இருந்துள்ளது. அக்காலத்தில் மகளிரை இரு பிரிவாகப் பகுத்தனர் என்பது தெளிவாகிறது. மகளிர் பாசறைக்குச் செல்லல், பாசறையில் வீரர்களுக்கு மதுவார்த்துக் கொடுத்தல், நடனமாடுதல் ஆகிய செயல்களை மகளிர் செய்ததாக தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. செல்வ மகளிர், உழைக்கும் மகளிர் என இரு வேறுபட்ட மகளிரின் நிலையை தொல்காப்பியம் மூலம் அறியமுடிகிறது. தொல்காப்பியர் கால மகளிர் எதையும் தாங்கும் இதயம் பெற்றிருந்ததைப் புறத்திணைப் பாடல்கள் எடுத்துரைக்கின்றன.*

***வீர மகளிர்***

*போர் முடிந்த பின் போர்க்களத்தில் பலர் வெட்டப்பட்டும் குத்தப்பட்டும் வீழ்ந்தும் கிடந்தனர். போர்க் களமே இரத்த வெள்ளத்தில் காணப்பட்டது. மகளிர் பலர் வீரப் புண்பட்ட ஆடவரைத் தேடிச் செல்கின்றனர். கற்புடைய மகளிர் சிலர் தங்கள் கணவருடன் தாங்களும் உயிர்விட எண்ணி உயிர்விடும் முன் தங்கள் கணவனின் முகங்களை ஒரு முறையாவது பார்க்க*

வேண்டும் என்ற எண்ணத்தில் போர்க்களம் புகுந்தனர். போர்க்களத்தில் தங்கள் கணவரைத் தேடி அழைத்தனர் என்ற செய்தியை கலிங்கத்துப்பரணி,

“தம் கணவருடன் தாமும் போக என்றே

சாதகரைக் கேட்பாரே, தடவிப் பார்ப்பார்

எம் கணவர் சிடந்த இடம் எங்கே! என்று என்று

இடாகினியைக் கேட்பாரைக் காண்மின் காண்மின் கலிங்கம்-482

என்று குறிப்பிடுகிறது. பேர்க்களத்தில் எல்லாக் காட்சிகளையும் கண்டு இடி தாங்கிகளாக இருக்கிறார்கள். இறந்த கணவனுடன் உடன்கட்டை ஏறிய பெண், கணவன் இறந்த பின் விதவைக் கோலம் பூண்ட பெண், போர்க்களத்தில் இறந்த தன் கணவனின் உடலைத் தேடி மடியில் வைத்து அழும் பெண், விழுப்புண்பட்டு இறந்த தன் மகனைக் கண்டு மகிழ்ந்த தாய், புறமுதுகிட்ட மகனைக் கண்டு தன் இரு மார்புகளையும் வெட்டிக் கொள்ளும் தாய் என்று பல்வேறு தரப்பட்ட வீரமகளிர் தமிழ் இலக்கியத்தில் காணப்படுகின்றனர்.

தாய், மனைவி, மகள், தலைமகள், தோழி, பொது மகளிர் என்று பல வேடங்களில் செயலாற்றினாலும் அனைத்திலும் செம்மையானவளாக தடுமாற்றம் இல்லாதவளாக பெண் வாழ்ந்திருக்கிறாள். இன்றும் பெண்கள் தன் இல்லத்திலும் கடமைகளைச் செய்து அலுவலம் சென்றும் தன் வேலையைச் செம்மையாகச் செய்கிறாள். பெண்கள் என்றென்றும் பெருமைப்படத் தக்கவர்கள் ஆவர்.

**தலையைப் பெற்ற மனைவி**

தான் போர்க்களம் சென்று போரிடா விடினும் தன் கணவனுக்கு உறுதுணையாக விளங்குகிறாள் மனைவி. போருக்கு முன்பை விட போருக்குப் பின்பு தான் போர்க்களம் மிகவும் அச்ச உணர்வை ஊட்டுவதாக இருக்கும். அத்தகைய நிலையிலும் பெண்ணானவள் தன் கணவனையோ மகனையோ தேடிச் செல்கிறாள். கணவனின் தலையைக் கண்ட மனைவி

“பொரு தடக்கை வாள்எங்கே? மணிமார்பு எங்கே?

போர் முகத்தில் எவர் வரினும் புறங்கொடாத

பரு வயிரத்தோள் எங்கே எங்கே? என்று

பயிரவியைக் கேட்பாளைக் காண்மின்! காண்மின்! (கலிங்கம்-485)

என்று கலிங்கத்துப்பரணி வெட்டப்பட்டுக் கிடக்கும் வீரனின் தலையைக் கையில் எடுத்தபடி மங்கை ஒருத்தி கைகளையும் கால்களையும் தேடுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. கொடூரம் மிகுந்த போர்க்களத்திற்குச் செல்லும் பெண்ணின் துணிச்சல் மறவுணர்வை வெளிப்படுத்துகிறது. இத்தகைய துணிச்சல் ஆபத்தானது என,

“கெடுக சிந்தை கடிது இவள் துணிவே” (புறம்-279:1)

புலவர் பாடியுள்ளார். ஒரு ஆணின் வெற்றிக்குப் பின்னால் ஒரு பெண் இருப்பாள் என்று இன்றைய தலைமுறையினர் கூறுவது வழக்கம். ஆனால் சங்க காலத்தில் ஒரு ஆணின் வெறிக்கும், வெற்றிக்கும் இல்லத்தில் இருந்து ஊக்குவிக்கும் மறவுணர்வு மிக்க பெண்களே காரணமாகின்றனர். இன்றைய கூற்று பழங்காலத்திலிருந்தே கடைபிடிக்கப்பட்டதைக் காணமுடிகிறது. அக்காலத்தில் வீரன் ஒருவன் போர்க்களம் சென்றபின் மனைவியர் பூச்சூடிக்

கொள்ளுதல் இல்லை. இச்செய்தியை அக இலக்கியங்களும் பதிவு செய்கின்றன. தலைவனைப் பிரிந்த தலைவி பூச்சூடி தன்னை அலங்கரித்தல் இல்லை.

**கணவனைக் கண்டு உயிர்விட்ட பெண்**

போர்க்களத்தில் தன் கணவனைத் தேடிச் செல்லும் பெண்கள் சிலர் கணவன் மாண்டு கிடப்பதைக் கண்டு தன் உயிரையும் போக்கிக் கொள்கிறாள் என்பதை,

*''வாய்மடித்துக் கிடந்தலை மகனை நோக்கி*

*மணி அதரத்து ஏதேனும் வடு உண்டாயோ?*

*நீ மடித்துக் கிடந்தது! எனப்புலவி கூர்ந்து,*

*நின்று ஆவி சோர்வாளைக் காண்மின், காண்மின்!*

*(கலிங்கம்-483)*

என்ற பாடல் வழி போர்க்களத்தில் கணவனைக் கண்டு தானும் உயிர்விடும் பெண்ணின் மறவுணர்வை கலிங்கத்துப் பரணி எடுத்துரைக்கிறது. இன்றைய காலத்தில் கணவனை இழந்த பெண்கள் உயிர்விடும் வழக்கம் இல்லை. இன்றைய காலத்தில் இளம் வயதில் கணவனை இழந்தால் மறுமணம் செய்யும் நடைமுறையும் உள்ளது. அக்காலத்தில் கணவன் மட்டுமே தனக்கு எல்லாம் என்று எண்ணி வாழ்கிறாள். ஆகையால் கணவன் இல்லாத இவ்வுலகில் தானும் வாழ மனமின்றி தன் உயிரை விடுகிறாள். இன்று தன் கணவன் இறந்த பின்பும் தன் குடும்பத்தைத் தானே தூக்கிச் சுமக்கும் பொறுப்பைப் பெறுகிறாள். தன் தாய், தந்தை, மகன், மகள், மாமனார், மாமியார் ஆகிய அனைவரையும் தான் ஒருவளாக நின்று பொறுப்புடன் பார்த்துக் கொள்கிறாள். அத்தகைய மனவலிமை மிக்கவள் பெண் ஆவாள்.

**உடன்கட்டை ஏறுதல்**

இல்லற வாழ்க்கை என்பது கணவனும் மனைவியுமாக இணைந்து வாழ்வது இவ்வாழ்க்கையில் பெண் தன் கண்வனை இழக்கும் பொழுது அவள் இன்னொரு ஆடவனை மறுமணம் செய்வதை சங்ககால தமிழ்ச் சமூகம் ஏற்கவில்லை. கணவனை இழந்த பெண்ணின் முன் இரண்டு வழி முறைகளை வைத்தது அவை,

- உடன்கட்டை ஏறதல்
- கைம்மை நோன்பு

ஆகிய வழிமுறைகள் ஆகும். கணவனுடன் வாழ்ந்த வாழ்வை நினைத்து ஒவ்வொரு நாளும் துன்பப்படுவதைவிட கணவன் இறந்த பின்பு தாமும் இறந்துவிடுவதே சிறந்தது என்று எண்ணி செயல்படுவதே உடன்கட்டை ஏறுதல் ஆகும். சங்ககாலம் தொட்டு சிற்றிலக்கிய காலம் வரை உடன்கட்டை ஏறும் வழக்கம் இருந்துள்ளதை கலிங்கத்துப் பரணி,

*''சாய்து விழும் கடகளிற்றினுடனே சாய்நந்து*
*தடங்குருதி மிசைப்படியும் கொடிகள், தங்கள்*
*காந்தருடன் கனல் அமளி அதன்மேல் வைகும்*
*கற்புடை மாதரை ஒத்தல் காண்மின், காண்மின்! (கலிங்கம்-481)*

என்று குறிப்பிடுகிறது. உடன்கட்டை ஏறுதல் ஜெயம் கொண்டார் யானைகளுடன் ஒப்பிட்டுக் கூறியுள்ளார்.

*கணவனை இழந்தபின் கைம்மை நோன்பு மேற்கொள்ள விரும்பாதவர்கள் உடன்கட்டை ஏறுதலையே பின்பற்றினர். இன்றைய காலகட்டத்தில் உடன்கட்டை ஏறும் வழக்கம் அரசாங்கத்தால் முற்றிலுமாக தடை செய்யப்பட்டுள்ளது. பல்வேறு போராட்டங்களுக்குப் பின் உடன்கட்டை ஏறும் வழக்கம் தடைசெய்யப்பட்டது. தற்காலத்தில் கணவனை இழந்த பெண்கள் மங்கள நிகழ்வில் பங்கு கொள்ள அனுமதி வழங்குவது இல்லை. தற்போது சிறிய அளவில் மக்களிடையே கணவனை இழந்த பெண்களும் சமமானவர்களாக மங்கள நிகழ்வில் மதிக்கப்பட வேண்டும் என்ற விழிப்புணர்வு உள்ளது. பிற்காலத்தில் இறந்த நிலையிலும் மாறும் என்பதில் ஐயமில்லை.*

**போர்க்களத்தில் உயிர்விடல்**

*போர்க்களத்தில் தன் கணவனைக் கண்டதும் கணவனைத் தழுவி உயிர்விடும் பெண்களும் இக்காலத்திலும் வாழ்நதனர். கணவன் மீது கொண்ட அன்பின் காரணமாகவும், தன்னைத் தவிர தன் கணவனை யாரும் தொட்டுவிடக் கூடாது என்பதனாலும் கணவன் போரில் இறந்ததும் மனைவியும் சேர்ந்து உயிரை விடுகிறாள் என்பதை,*

*“தரைமகளும்தன் கொழுநன் உடலம் தன்னைத்*
*தாங்காமல் தன் கரத்தால் தாங்கி விண்ணாட்டு*
*அரமகளிர் அவ்வுயிரைப் புணரா முன்னம்*
*ஆவிஞுக்க விடுவாளைக் காண்மின், காண்மின்!* *(கலிங்கம்-484)*

*என்று கலிங்கத்துப்பரணி எடுத்துரைக்கிறது. எந்தப் பெண்ணும் தன் கணவனைப் பிற பெண்ணை பார்ப்பதைக் கூட பொறுக்கமாட்டாள். கணவன் இறந்த பின்பும் நிலமகளும் தன் கணவனைத் தொடக்கூடாது என்று எண்ணுகிறாள். தேவலோகப் பெண்கள் கூட தன் கணவனை வரவேற்கக் கூடாது என்பதால் தானும் உயிர்விட்டு கணவனுக்கு முன் தேவலோகம் சென்று கணவனை வரவேற்பதற்காக கலிங்கத்துப்பரணி குறிப்பிடுகிறது. அக்கால பெண்கள் தன் கணவன் மீது அதீத அன்பு கொண்டிருந்ததனால் அக இலக்கியங்களிலும் கணவன் தன்னைப் பிரிந்து பரத்தையர்பால் செல்வதை ஏற்கமாட்டாள் என்பதை அறியமுடிகிறது.*

**முடிவுரை**

*இன்றைய காலத்தில் பெண்ணியம் பெரிதும் வளாந்துள்ளது. அக்கால தமிழ்ப் பெண்கள் வாழ்ந்த வாழ்க்கை முறையை தமிழ் இலக்கியங்களும், இலக்கணங்களும் எடுத்துரைக்கின்றன. மறவுணர்வு கொண்ட வீர மகளிரின் வாழ்க்கை முறை அக்காலத்தில் உடல் சார்ந்தும், மனம் சார்ந்தும் துன்பங்களைத் தரக் கூடியதாக இருந்தாலும் மனவலிமையுடன் திகழ்ந்தனர். இக்காலத்தில் பெண்கள் பல இடங்களுக்கும் செல்ல அனுமதி வழங்கப்படுகிறது. எல்லாத் துறைகளிலும் சாதனை படைத்து வருகிறார்கள் இன்றைய பெண்கள். தற்போது பெண்களுக்கென்று சில தடைகளே உள்ளன. அவையும் பிற்காலத்தில் மாறும் என்பதில் ஐயமில்லை.*

**மேற்கோள்**


- *இளம்பூரணர் உரை - தொல்காப்பியம்*
- *சைவ சித்தாந்த நூற்பதிப்பு கழகம்*
- *சென்னை*
- *மு.ப.1947*
- *ஜெயம் கொண்டார் கலிங்கத்து பரணி*
- *சாரதா பதிப்பகமசென்னைமு.ப.2018*